1030

# கடலூர் மாநகராட்சி

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீகுரோதி வருடம் ஆனி மாதம் 14-ஆம் தேதி 2024-ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு கீழ்க்கண்ட பொருட்கள் சம்பந்தமாக நிருவாக நலன் கருதி கடலூார் மாமன்றத்தின் அவசரக் கூட்டம் கடலூர் மாமன்ற கூடத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேயர் 25/6/2024
கடலூர் மாநகராட்சி

மாநகராட்சி அலுவலகம்,
கடலூர்.
நாள் 25.06.2024

## பொருட்கள்

1) கடலூர் மாநகராட்சி பகுதிகளில் **TNCRUDP FUND** ன்கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள அரசாணை எண் 94, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள் 12.07.2023ன் படி, நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணி விவரம் | மதிப்பீடு (ரூ.கோடியில் ) |
|---|---|---|
| 1 | **TNCRUDP FUND** – கடலூர் மாநகராட்சி பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் விடுபட்டுள்ள இடங்களில் புதிதாக பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்துதல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் | 149.205 |

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட 23.01.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின், விலைத்தொகுப்பு 01.02.2024ல் பிரிக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

| வ. எண் | மதிப்பீடு (ரூ.கோடியில் ) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 149.205 | M/s. Kevadiya Construction Pvt, Ltd, | 38.97% மதிப்பீட்டைவிட அதிகம் |
| | | N.P Patel & Co | 49.79% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள இரண்டு நிறுவனங்களும் மதிப்பீட்டை விட கூடுதல் விலைவிகிதம் அளித்துள்ளதால், இவற்றில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள M/s. Kevadiya Construction Pvt, Ltd, நிறுவனத்திடம் விலைகுறைப்பு செய்ய கோரியதில் கீழ்கண்டவாறு விலைவிகிதம் அளித்துள்ளனர்.

| வ. எண் | தேதி | ஒப்பந்ததாரர் பெயர் | விலைக்குறைப்பிற்கு பின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | 02.02.2024 | M/s. Kevadiya Construction Pvt, Ltd, | 25.94% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | 05.02.2024 | | 14.97% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | 06.02.2024 | | 9.90% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 4 | 08.02.2024 | | 7.47% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்படி, 7.47% மதிப்பீட்டைவிட அதிகம் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் அளித்துள்ள M/s. Kevadiya Construction Pvt, Ltd, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைப்பொறியாளர், சென்னை அவர்களின் தலைமையில் 16.03.2023 காலை 11.00 மணியளவில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது. மேலும் மேற்கண்ட பணிக்கு 7.47% மதிப்பீட்டைவிட அதிக விலை விகிதத்திற்குண்டான தொகை

| | |
|---|---|
| | ரூ.8,80,15,457/—னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும், மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, இசைவு கடிதம் அனுப்பியதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| அ.கு. | 1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. 7.47% மதிப்பீட்டைவிட அதிக விலை விகிதத்திற்குண்டான தொகை ரூ.8,80,15,457/—னை மாநகராட்சி பொது நிதியிலிருந்து ஈடுசெய்து கொள்ளவும், மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று, இசைவு கடிதம் அனுப்பியதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம். |

மாநகராட்சி அலுவலகம்,
கடலூர்.
நாள் 25.06.2024

மேயர்
கடலூர் மாநகராட்சி